ஆண்டு சந்தா ரூ. 60/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

செய்திமலர்

மலர் : 5 இதழ் : 7 மே 2009





# சுதேச ஊழியர் சாட்சி
# சகோ. முனேஷ் டாமோர்

இராஜஸ்தான்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். என்னுடைய பெயர் முனேஷ் டாமோர். நான் இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் குசல்கட் தாலுகாவில் டாண்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறியாத ஒரு குடும்பத்தில் பிறந்தவன். பிசாசு எனக்குள் இருந்ததினால் பிசாசின் பலத்தினால் அதிகமாக சண்டை போடுவேன். மேலும் சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்து வந்தேன்.

இந்த நேரத்தில் என்னுடைய சரீரம் முழுவதும் பிசாசினால் பாதிக்கப்பட்டு சரீரம் செயழிழந்து நடுங்க ஆரம்பித்தது. திடீரென்று கீழே விழுந்து விடுவேன். இப்படியாக மிகவும் வேதனைப்பட்டு வந்தேன். இதிலிருந்து விடுதலை கிடைப்பதற்காக மந்திரம் மற்றும் மருத்துவங்கள் செய்தும் பலனில்லை. மிகவும் வேதனையோடு இருந்த நேரத்தில் ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. கல்யாபாய் என்னை சந்தித்து இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறி எனக்காக பாரத்தோடு ஜெபித்தார். ஜெபித்த நான்கு நாட்களில் தேவன் அற்புதமாக வியாதியிலிருந்து விடுதலை கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் இயேசுதான் உண்மையான தெய்வம் என அறிக்கை செய்து ஏற்றுக்கொண்டேன். பின்பு எங்கள் கிராமத்தில் நடைபெற்றஆராதனைகளில் கலந்து கொண்டு என் பாவங்கள் அனைத்தையும் அறிக்கை செய்து விட்டுவிட்டு முழுவதுமாக விடுதலையை பெற்றுக் கொண்டேன். தெய்வீக சமாதானம் என்னுள்ளத்தை நிரப்பியது. வேதவசனங்களை வாசித்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தேன். தேவன் என்னை பரிசுத்தஆவியினால் நிரப்பினார். பின்பு ஊழியம் செய்ய வேண்டும் என்ற பாரம் என்னுள்ளத்தில் ஏற்படவே என்னுடைய வாழ்க்கையை தேவனுக்கென்று அர்ப்பணித்தேன். பின்பு ஷாலோம் வேதாகம பள்ளியில் இரண்டு வருட பயிற்சிக்கு பின்பு முழு நேரமாக குடும்பமாக தேவனுடைய ஊழியத்தை செய்து வருகிறேன். வாக்கனோர் என்ற கிராமத்தில் ஊழியம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. சுமார் 50 குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு விசுவாசத்தில் வளர்நது வருகிறார்கள். தொடர்ந்து எனக்காகவும் எனது ஊழியங்களுக்காகவும், குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரை தாங்குவோர் : **Mrs. Anne Prakash,** U.S.A.



## ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, தேவ கிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் வளர்ந்து பெருகி வருகின்றது. தேவனுக்கே மகிமை! ஏப்ரல் 1ம் தேதி முதல் 4ம் தேதி வரை 72 மணி நேர தொடர் உபவாச ஜெபம் நமது பாரத தேசத்திற்காக தேசிய பிராத்தனைக் கூட்டமைப்பு மூலமாக தாகோத் பட்டணத்தில் CNI ஆலயத்தில் நடத்தப்பட்டது. இந்த உபவாச ஜெபத்தில் அதிகமாக நம் ஷாலோம் சபைகள் ஆவியில் நிறைந்து குறிப்பாக 3 இரவுகளில் 36 மணி நேரம் விஷேசித்த ஜெபத்தை தேசத்திற்காகவும், பாராளுமன்ற தேர்த—ல் தேவசித்தம் நிறைவேறவும் கருத்தாய் ஜெபித்தார்கள். மேலும் பணித்தளத்தில் பெரியவியாழன், பெரியவெள்ளி, மற்றும் உயிர்த்தெழுத—ன் பண்டிகைளை இதுவரை இல்லாத அளவிற்கு வெகு சிறப்பாகவும், அசீர்வாதமாகவும் கொண்டாடினார்கள். நூற்றுக்கணக்கான பீல் மக்கள் திருமுழுக்குப் பெற்று கர்த்தருடைய பந்தியில் பங்குபெற்றார்கள். அடுத்த இதழில் இதுபற்றிய விபரங்களைக் கொடுக்கிறோம்.

நமது ஷாலோம் பணித்தளத்தில் CBC நடத்த ஆயத்தப்பட்டு வருகிறோம். இந்த ஆண்டு மே மாதத்தில் நடைபெற இருக்கின்ற CBC (Children Bible Class) 20,000க்கும் அதிகமான சிறுவர்களுக்கு ஆசீர்வாதமாக அமைய 250 பேருக்கு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. மே 4ம் தேதி முதல் மே 13ம் தேதி வரை 10 நாட்கள் CBC (VBS) சிறப்பாக நடைபெறவுள்ளது. தேவ கிருபையினால் ஏப்ரல் 20ம் தேதி முதல் 25ம் தேதி வரை நமது 60 பீல் சுதேச ஊழியர்களுக்கு ஆராம்ப சுகாதார பயிற்சி முகாம் மற்றும் 5 நாட்கள் இலவச மருத்துவ முகாம்கள் Rusha, Vellore —ருந்து வந்த Dr. Abel அவர்கள் குடும்பம், Dr. Inba மற்றும் Dr. Jasmine ஆகியோர் தலைமையில் மருத்துவ குழுவினருடன் நடத்தினோம். மேலும் புதிதாக 20 இடங்களில் ஆலய கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றது. தடைகளின்றி கட்டிமுடிக்கப்பட ஜெபியுங்கள். 3 மாநிலங்களிலும் கோடை கால வறட்சியின் நிமித்தமாக குடிநீர் கூட கிடைக்காத அளவிற்கு கஷ்டப்படும் நமது பீல் மக்களை தேவன் நினைத்தருள ஜெபியுங்கள்.

உங்கள் யாவருக்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மே மாதத்தில் தமிழகத்தில் நடைபெறும் நற்செய்திக் கூட்டங்கள், VBS, வா—பர் முகாம்கள் மற்றும் பலதரப்பட்ட கூட்டங்கள், முகாம்களுக்காக ஜெபியுங்கள், பங்குபெறுங்கள். தேவன்தாமே உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதித்து நல்ல தேர்வு முடிவுகளைத் தந்து நல்ல மேல் படிப்பினையும், வேலையையும் தந்து ஆசீர்வதிப்பாராக!

**“நான் (கர்த்தர்) இஸ்ரவே—ன் குடும்பத்துக்கும், யூதாவின் குடும்பத்துக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன்”. (எரே. 33:14)**

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

## உன் சந்ததியின்மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்...

சிறப்புச் செய்தி : **சகோ. V. தேவதாஸ்**

நம் ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். நாங்கள் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருந்தபோது **"பீல் ஆதிவாசி மக்கள் மீது நான் அளவற்ற ஆவியின் அபிஷேகத்தையும் அனைத்து உலக ஆசீர்வாதங்களையும் ஊற்றுவேன்"** என்று தேவன் வாக்குரைத்தார். அது மட்டுமல்ல பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிக்காக **"ஜெபிப்போர் கொடுப்போர் மீதும் அதே ஆசீர்வாதங்களை ஊற்றுவார்".** அதற்காக நாங்கள் விசேஷமாக ஜெபித்துவருகிறோம்.

இந்த வாக்குத்தத்தத்தை தேவன் ஏசாயா 4:1–ல் "இப்போதும் என் தாசனாகிய யாக்கோபே, நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலே கேள்" என்று அழைத்து அதன்பின் கொடுக்கிறார். ஆண்டவர் இந்த வாக்குத்தத்தத்தை இஸ்ரவேலாகிய யாக்கோபுக்குத் தருகிறார். இஸ்ரவேல் என்றால் "தேவ ஜனம்" என்று பொருள். அது நம்மை தான் குறிக்கிறது. ஆண்டவர் நம்மை "இஸ்ரவேல்" என்று அழைக்கிறார். தாயின் கர்ப்பத்தில் சிருஷ்டித்த யாக்கோபை தேவன் இஸ்ரவேலாக உருவாக்குகிறார் (ஏசா. 43:1) நாமும் யாக்கோபாக அல்ல இஸ்ரவேலாக, தேவஜனமாக, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள தேவன் விரும்புகிறார். வேதத்தில் "யாக்கோபு எப்படி தேவனிடத்தில் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான்" என்று சற்று தியானிப்போம்.

முதலாவது ஆதியாகமம் 32:24–ல் யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான் என்று பார்க்கிறோம். அந்த வேளையில் ஆண்டவர் "உன் பெயர் என்ன?" என்று கேட்டார். அதற்கு அவன் "யாக்கோபு என்று சொன்னான்". சில வருடங்களுக்கு முன்பாக தன் தகப்பனிடத்தி–ருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தன்னுடைய மூத்த சகோதரனைப் போல நடித்து, தன் தகப்பனாகிய ஈசாக்கு "நீ யார் என் மகனே?" என்று கேட்டபொழுது, யாக்கோபு தன் தகப்பனை நோக்கி "நான் தங்கள் மூத்த மகனாகிய

ஏசா" என்று பொய் சொல்– ஏமாற்றி தகப்பனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். ஏசா மனம் கசந்து அழுது "அவன் பெயர் யாக்கோபு என்பது சரியல்லவா இதுவரை இரண்டு முறை என்னை ஏமாற்றினான். என் சேஷ்டபுத்திரபாகத்தையும் எடுத்துக் கொண்டான். இப்பொழுது என் ஆசீர்வாதத்தையும் எடுத்துக் கொண்டான்" என்று அலறினான். இப்படியாக பொய் சொல்– ஏமாற்றி வஞ்சித்து பெற்றுக் கொள்கிற ஆசீர்வாதங்களில் நிம்மதி இல்லை. யாக்கோபு உலக ஆசீர்வாதங்களை அதிகமாய் சம்பாதித்துவிட்டபோதிலும் அவன் செய்த பாவத்தின் நிமித்தமாக பயம் அவனை ஆட்கொள்கிறது. இறுதியில் ஆண்டவரிடத்தில் "நீர் என்னை ஆசீர்வதிக்க வேண்டும்" என்று கெஞ்சுகிறான். அப்பொழுது ஆண்டவர் உன் பெயர் என்ன என்று கேட்டபொழுது அவனால் தேவனை ஏமாற்றவோ, பொய் சொல்லவோ முடியவில்லை. நான் யாக்கோபு (மோசம் போக்குகிறவன்) என்று ஒத்துக் கொள்கிறான்.

பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலும், நம்முடைய பிரயாசத்தின் நிமித்தமாக மற்றவர்களை ஏமாற்றியோ, பொய் சொல்–யோ, மற்றவர்களுக்கு துக்கம் உண்டாக்கியோ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது. அப்படி பெற்றுக் கொள்கிற ஆசீர்வாதம் நிலைத்திருக்காது. கண்ணியை வருவிக்கும், பயத்தை உருவாக்கும். ஆனால் ஆண்டவரிடத்தில் வந்து நம் தவறுகளை உணர்ந்து பாவங்களை அறிக்கை செய்து, என்னை ஆசீர்வதியும் என்று கெஞ்சி ஜெபிக்கும்போது நம்மை தேவ ஜனமாக (இஸ்ரவேலாக) மாற்றி கட்டாயம் ஆசீர்வதிப்பார். கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். (நீதி. 10:22)

இரண்டாவதாக, யாக்கோபு தன்னுடைய வாழ்க்கையில் தன்னுடைய தவறுகளை உணர்ந்தபொழுது தன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய சர்வ வல்ல தேவனிடத்தில் விசுவாசம் வைத்தான். ஆண்டவர் ஆபிரகாமிற்கும் ஈசாக்குக்கும் கொடுத்த வாக்குத்தத்தங்களை நினைத்து அதை தனக்கு சொந்தமாக்கிக் கொண்டு விசுவாசித்தான். பின்பு யாக்கோபு "என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே, உன் தேசத்திற்கும்

உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப் போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்–யிருக்கிற கர்த்தாவே, தேவரீரோ நான் உனக்கு மெய்யாகவே நன்மை செய்து உன் சந்ததியை எண்ணி முடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப் பண்ணுவேன் என்று சொன்னீரே" என்றான். (ஆதி. 32:9,12) ஆண்டவரிடத்தில் வாக்குத்தத்தங்களைச் சொல்– அதாவது என்னுடனே சொல்–யிருக்கிற கர்த்தாவே..... என்று சொல்– விசுவாசித்து ஜெபித்தான். தேவ ஜனமாகிய நாம் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்றால் நம்முடைய வீடுகளில் சுவரிலும் கதவுகளிலும் வாக்குத்தத்த வசனங்களை ஒட்டி வைத்திருப்பதினால் மட்டும் பெற்றுக் கொள்ள முடியாது. அவைகளை அறிக்கை செய்து விசுவாசத்தோடு ஜெபித்து பெற்றுக்கொள்ள வேண்டும். மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிற தேவனிடத்தில் நாம் விசுவாசம் கொள்வோம். "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" என்று இயேசு சொன்னார்.

மூன்றாவதாக, தேவனிடத்தில் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள யாக்கோபு போராடி ஜெபித்தான். அவர் "நான் போகட்டும் பொழுது விடிகிறது" என்றார். அதற்கு யாக்கோபு "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்" என்றார். (ஆதி. 33:26)

நம்முடைய வாழ்க்கையிலும் குடும்பத்திலும் ஊழியத்திலும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்வரை போராடி ஜெபிக்க வேண்டும். வேதத்தில் ஆபிரகாம், மோசே, யோசுவா, எ–யா, தாவீது, போன்ற பக்தர்கள் போராடி ஜெபித்தார்கள். நாமும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்வரை போராடி ஜெபிப்போம்.

யாக்கோபைப் போல் நாமும் தேவனிடத்தில் நம் தவறுதல்களை ஒத்துக் கொண்டு அறிக்கை செய்வோம். தேவனிடத்தில் விசுவாசத்தோடு எதிர்பார்ப்போம். பெற்றுக்கொள்ளும்வரை போராடி ஜெபிப்போம். **"உன் சந்ததியின் மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்"** என்ற வாக்குத்தத்தத்தின்படி தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்!

## ஜெபக் குறிப்புகள்

### சிறுவர் வேதாகம பள்ளி (CBC)



- ✞ பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்கென்று இந்த ஆண்டும் மே மாதம் 4ம் தேதி முதல் 13ம் தேதி வரை சிறுவர் வேதாமகப் பள்ளி ஷாலோம் பணித்தளத்தில் நடைபெற உள்ளது.
- ✞ 520 இடங்களில் நடைபெற உள்ள இந்த சிறுவர் வேதாகமப் பள்ளியில் சுமார் 20,000 சிறுவர்கள் பங்குபெற உள்ளார்கள்.
- ✞ இந்த சிறுவர் வேதாகப் பள்ளியின் மூலம் பீல் ஆதிவாசி சிறுவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவும், அவருடைய அன்பில் வளரவும் ஜெபியுங்கள்....

### கிராம ஆலயங்கள்

- ✞ ஷாலோம் பணித்தளங்களில் 20 கிராமங்களில் ஆலய கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன இதற்காக ஜெபியுங்கள்..
- ✞ 20 ஆலயங்களும் எந்த தடையும், பிரச்சனையுமின்றி கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள்.

### சுதேச ஊழியர்கள்

- ✞ தேவன் நமக்கு தந்துள்ள 435 பீல் சுதேச ஊழியர்களுக்காக பாரத்தோடு ஜெபியுங்கள்..
- ✞ சுதேச ஊழியர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காக ஜெபியுங்கள்..
- ✞ சுதேச ஊழியர்களின் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்கள் தேவனால் பாதுகாக்கப்படவும் ஜெபியுங்கள்...

### கால சூழ்நிலைகள்

- ✞ வட இந்தியாவில் இந்நாட்களில் கடுமையான வெயில் காணப்படுகிறது. குறிப்பாக நம்முடைய பகுதியில் மிகவும் கடுமையான வெயில் காணப்படுகிறது. இந்த வெயி–ன் கொடுமை தணியும்படி ஜெபியுங்கள்...
- ✞ இந்த நாட்களில் ஏற்படுகின்ற தண்ணீர் பஞ்சம் வராம–ருக்க ஜெபியுங்கள்...
- ✞ இந்தநாட்களில் தாக்கக்கூடிய கொடிய நோய்களி–ருந்து பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் ஊழியர்களை தேவன் பாதுகாக்க ஜெபியுங்கள்...

### HAND PUMP PROJECT

- ✞ CBN ஸ்தாபனத்தின் மூலமாக இந்த ஆண்டு மே மாதத்தில் இராஜஸ்தான் மாநிலத்தில் பீல் ஆதிவாசி மக்கள் வாழும் 40 கிராமங்களில் ஆழ்குழாய் கிணறுகள் போடப்படவுள்ளன.
- ✞ குறைந்த ஆழத்திலேயே நல்ல தண்ணீர் கிடைக்கும்படியாகவும், எந்த தடங்கலும் வராதபடி இந்த Project நிறைவேறவும் ஜெபியுங்கள்.

**பீல் விசுவாசிகள்**

- ✞ இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ள நமது பீல் விசுவாசிகளுக்காக ஜெபியுங்கள்...
- ✞ குறிப்பாக இந்த கோடை காலங்களில் விவசாயம் இல்லாத காரணத்தினால் சூரத், பரோடா, காந்திநகர், அகமதாபாத் போன்ற பெரிய பட்டணங்களுக்குச் சென்று கூ– வேலை செய்வார்கள். அவர்கள் செல்கின்ற இடங்களில் சாட்சியாக வாழ ஜெபியுங்கள்...
- ✞ இவர்கள் வேலை செய்யும் இடங்களிலும் தேவன் இவர்களைப் பயன்படுத்த ஜெபியுங்கள்..
- ✞ இவர்களுக்கு ஏற்ற வருமானம் கிடைத்து ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்..

**பயிற்சி கூடாரம்**

- ✞ குஜராத் தாகோத் நகரில் தினமும் ஏதாவது கூட்டங்கள் மற்றும் ஊழியர் கூடுகை, பெண்கள் கூடுகை, மூப்பர்கள் முகாம், சிறுவர்கள் முகாம், உபவாச ஜெபங்கள் போன்ற கூட்டங்களும் பல பயிற்சி முகாம்களும் நடைபெற்று வருகின்றன. இவை அனைத்தும் CNI பயிற்சி கூடமான வாடகை இடத்தில் நடைபெற்ற வருகின்றது. தேவன் நமக்கு மூன்று மாநிலங்களிலும் சொந்தமாக பயிற்சி கூடங்கள் தரும்படியாக ஜெபியுங்கள்...
- ✞ முதலாவதாக தேவன் குஜராத்தில் சொந்த நிலம் தந்து அந்த இடத்தில் பயிற்சி கூடம் கட்டும்படியாக ஜெபியுங்கள்.

**பணித்தள அலுவலகம்**

- ✞ குஜராத் தாகோத் நகரில் உள்ள பணித்தள அலுவலகத்தில் ஊழியம் செய்யும் தேவ பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்....
- ✞ அவர்களின் பாதுகாலுக்காவும், சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.
- ✞ பணித்தள அலுவலக நிர்வாகத்திற்காகவும் அங்குள்ள வாகனங்களுக்காகவும், பொல்லாத மனிதர்களின் கண்களி–ருந்து தேவன் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

**தலைமை அலுவலகம்**

- ✞ தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் ஊழியம் செய்யும் தேவ பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.
- ✞ தலைமை அலுவலகத்தில் செயல்படும்
  ஜெப ஊழியங்கள்,
  நிதி & கணக்கு வைப்பு ஊழியங்கள்,
  முன்னேற்றப்பணி ஊழியங்கள்,
  ஆதரவாளர்கள் தொடர்பு ஊழியங்கள்,
  நன்றிக் கடித ஊழியங்கள்,

பத்திரிக்கை ஊழியங்கள்,

மாத அறிக்கை ஊழியங்கள்,

இ–மெயில் இன்டர்நெட் ஊழியங்கள் இது தவிர இங்கு நடைபெறும் அனைத்து ஊழியங்களும் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்...

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் பரிசுத்த ஆவியானவருடைய ஆளுகைக்காக ஜெபியுங்கள்.

## கிளை அலுவலகங்களுக்காக

✞ சென்னையிலுள்ள ஷாலோம் கிளை அலுவலகத்திற்காகவும், அங்கிருந்து ஊழியம் செய்து வரும் சகோ. எபனேசர் அவர்களுக்காகவும் அவர்களது குடும்பத்திற்காகவும் தேவ பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

✞ மார்த்தாண்டத்திலுள்ள ஷாலோம் கிளை அலுவலகத்திற்காகவும், அங்கிருந்து ஊழியம் செய்து வரும் சகோ. செல்வதுரை அவர்களுக்காகவும் அவர்களது குடும்பத்திற்காகவும் தேவ பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

## சகோதரரின் குடும்பத்திற்காக

✞ சகோ. தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களின் பாதுகாப்பிற்காகவும் நல்ல சுகத்திற்காகவும் அனுதினமும் ஜெபியுங்கள்.

✞ தேவன் அவர்களை பீல் மக்கள் மத்தியில் இன்னும் அநேக திட்டங்களைக் கொடுத்து, அதிகமாய் பயன்படுத்தும்படி ஜெபியுங்கள்.

✞ தமிழ்நாட்டில் படித்துக் கொண்டிருக்கும் அவர்களின் பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா ஆகிய மூன்று பேருக்காகவும் ஜெபியுங்கள்.

## ஷாலோம் ஆதரவாளர்கள்

✞ நம் ஷாலோம் மிஷனெரி ஊழியங்களை ஜெபத்தினாலும், பொருளுதவியினாலும் தாங்கி வரும் ஆதரவாளர்கள், பிரதிநிதிகள், செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்காகவும் பாரத்துடன் ஜெபியுங்கள்.

✞ மேலும் ஊழியங்களைத் தாங்கிவரும் ஊழியர்கள், சபைகள், போதகர்கள், ஜெபக்குழுக்கள், ஊழிய ஸ்தாபனங்கள் மற்றும் தொழில் செய்கிறவர்கள், வேலை செய்கிறவர்கள் அனைவரும் அவர்கள் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

## ஊழியத்தின் தேவைகள்

✞ பணித்தளங்களில் ஊழியங்கள் வளர வளர தேவைகள் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றது. இந்த தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட பாரத்தோடு ஜெபியுங்கள்.

✞ மாதந்தோறும் ரூ. 500/– கொடுக்கக்கூடிய 500 கிராம ஆதரவாளர்கள் உடனடியாக எழும்ப ஜெபியுங்கள். (இன்னும் 405 கிராம ஆதரவாளர்கள் தேவை)

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

மாணவனின் பெயர் : **டேவிட் சர்போட்டா**

தகப்பனார் பெயர் : ரமேஷ்வர் சர்போட்டா

தாயார் பெயர் : ஹுரா சர்போட்டா

பிறந்த நாள் : 07.06.2001

படிக்கும் வகுப்பு : UKG

சொந்த ஊரின் பெயர் : குண்ட்லா

தாலூகா : மேக்நகர்

மாவட்டம் : ஜாபுவா

மாநிலம் : மத்தியப்பிரதேசம்

தங்கி படிக்கும் விடுதி : Home



**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

டேவிட் சர்போட்டாவினுடைய தகப்பனாரின் பெயர் ரமேஷ் சர்போட்டா. இவர் மத்தியப்பிரதேசம், ஜாபுவா மாவட்டத்திலுள்ள குண்ட்லா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அந்தகாரத்திற்குள் இருப்பவர்கள். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அறிவும் உலகப்பிரகாரமான அறிவும் இல்லாமல் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் மக்கள் இவர்கள். மந்திரவாதிகளை முன்னோடிகளாகவும், தலைவர்களாகவும் மதிக்கிறவர்கள். மேலும் அசுத்த ஆவிகளை வணங்கி வருபவர்கள். இவர்களில் ஒருவர்தான் சகோ. ரமேஷ் சர்போட்டா அசுத்த ஆவிகளை வணங்கியதால் அசுத்த ஆவியின் பிடியில் சிக்குண்டு பைத்தியமாக இருந்தார். மந்திர பூஜைகளைச் செய்தும் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டும் எந்த பலனுமில்லை. இந்த சூழ்நிலையில் இதைக் கேள்விபட்ட ஷாலோம் சுதேச ஊழியர் இவரது வீட்டிற்குச் சென்று இவருக்காக ஜெபித்தார். ஜெபத்தைக் கேட்டு தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார். இவரது வீட்டில் சந்தோஷமும் மகிழ்ச்சியும் வந்தது. பின்பு இயேசுவே உண்மையான தெய்வம் என்று குடும்பமாக ஆராதிக்க ஆரம்பித்தனர். பின்பு இவர் தனது பாவங்களை அறிக்கை செய்து இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்று தேவனுக்காக தன்னை அர்ப்பணித்து தன் சொந்த மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** இவன் ஜெபம் பண்ணுவதிலும், வேதம் வாசிப்பதிலும், பாடல் பாடுவதிலும் மிகவும் வாஞ்சை கொண்டவன். படித்துமுடித்தபின் ஊழியக்காரனாக வரவேண்டும் என்ற வாஞ்சை உள்ளது.

**ஜெபியுங்கள்:-** நல்ல முறையில் படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும், குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும், பெற்றோர் செய்கின்ற ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் :** **Miss. P. Kirthika,** Bangalore.

(இந்த சிறுவனைப் போல் இன்னும் 260 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)

# பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதாகமத் திட்டம் (Bible Project)

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும். இந்த ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள 1000 விசுவாசிகளுக்கு 1000 குஜராத்தி வேதாகமங்களும், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் மாநிலங்களிலுள்ள 5000 விசுவாசிகளுக்கு 5000 ஹிந்தி வேதாகமங்களும் மொத்தம் 6000 வேதாகமங்கள் (ஹிந்தி 5000, குஜராத்தி 1000) தேவைப்படுகிறது.

அகமதாபாத், இந்திய வேதாகமச் சங்கத்தி–ருந்து நமக்கு ஒரு வேதாகமம் ரூ. 80/– என்ற விலைக்கு தர இசைந்துள்ளார்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இதுவரை 450 வேதப்புத்தகங்களுக்கு காணிக்கை கிடைக்கப்பெற்றுள்ளோம். ஆகவே இந்தத் திட்டத்திற்காக (5550 X ரூ. 80) **ரூ. 4,44,000** தேவைப்படுகிறது. இந்த நிதித் தேவை சந்திக்கப்படும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்களை வாங்கிக் கொடுக்கலாம். அதற்கான தொகையை SHARING LOVE MISSION என்ற பெயரில் D.D. அல்லது Cheque எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவதிட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

## எங்களுடன் தொடர்பு கொள்ள


தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Bro. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

# CBC (Children Bible Class)

கடந்த ஆண்டில் பணித்தளங்களில் நாம் நடத்திய CBC (Children Bible Class) மூலமாக ஆதிவாசி சிறுவர்கள் சுமார் **17,000** பேர் பங்கு பெற்று இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக் கொண்டார்கள். அதேபோல் இந்த ஆண்டும் வருகின்ற மே மாதத்தில் **20,000** சிறுவர்களுக்கு **520** Center- ல் CBC நடத்தலாம் என ஜெபித்துத் தீர்மானித்து செயல்பட்டு வருகிறோம்.

***இதற்கான தேவைகள்:–***

**1.** **520** ஆசிரியர்களுக்கான பயிற்சி கையேடுகள்

**2.** **20,000** CBC புத்தகங்கள்.

**3.** Badge.

**4.** பாட்டு புத்தகங்கள்

**5.** கலர் பென்சில்கள், பேனாக்கள்

**CBC** புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்ற பொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா ரூ. 10/– வீதம் 20,000 குழந்தைகளுக்கு **ரூ. 2 இலட்சம்** தேவைப்படுகிறது. இதுவரையில் **1,50,000/–** கிடைக்கப் பெற்றுள்ளோம். மீதி ரூ. **50,000/–** கிடைக்கப்பெற ஜெபியுங்கள். மேலும் இதை வாசித்துக் கொண்டிருக்கும் உங்கள் உள்ளத்தில் ஆண்டவர் பேசினால் இந்தத் திட்டத்திற்காக உதவ முன் வாருங்கள்...

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!




கடந்த ஆண்டு சிறுவர்களுக்கு வழங்கப்பட்ட CBC புத்தகங்கள்

**“சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்“**

*– இயேசு. மாற்கு 10:14*

# ஷாலோம் பங்காளர் கூடுகை - மார்த்தாண்டம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

கடந்த **22.03.2009** அன்று தேவனுடைய பெரிதான கிருபையினால் ஷாலோம் பங்காளர் கூடுகை மார்த்தாண்டம், ஸ்டண்டர்ட் ஆடிட்டோரியத்தில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. இந்த கூடுகையின் ஆரம்ப ஜெபத்தை **Rev. R. ஏசுதாசன்** (A.G. சபை, திருவட்டார்) அவர்கள் ஏறெடுத்தார்கள். பாடல்கள் மற்றும் ஆராதனையை **A.G. சபை குழுவினர்** (ஆற்றூர்) நடத்தினார்கள். அதன்பின் **சகோ. ஜார்ஜ் மற்றும் Rev. R. ஏசுதாசன்** (A.G. சபை, மார்த்தாண்டம்) இவர்கள் இருவரும் ஷாலோம் ஊழியங்களின் பணித்தளங்களைப் பார்வையிட்ட அனுபவத்தையும் ஊழியங்களைக் குறித்தும் பணித்தளங்களிளுள்ள காரியங்களைக் குறித்தும் எடுத்துரைத்தார்கள்

இந்தக் கூடுகையில் மூன்று ஷாலோம் பீல் சுதேச ஊழியர்கள் **Rev.இம்மானுவேல்** (CSI ஆலயம், அரசகுளம்) அவர்கள் தலைமையில் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். மூன்று ஊழியர்களின் பெயர் மற்றும் அவர்களைத் தாங்குவோர் விபரங்கள் :–

**ரசியா டாமோர்** (தோரண்யா, ம.பி) Spon. : **Bro. ஜான்விக்டர்,** குளித்துரை
**பாபுலால் கட்டாரா** (அமிப்புரா, இராஜ) Spon. : **Bro. சுந்தர் ராஜ்,** பயணம்
**லக்ஸ்மன் P. புரியா** (ஜால்ரா, இராஜ) Spon. : **Mrs. மலர்பென்,** மார்த்தாண்டம்

மிஷனெரி பிரதிஷ்டையைத் தொடர்ந்து **Bro. சுதந்திரசிங்,** (சென்னை) அவர்கள் ஷாலோம் ஊழியத்திற்கு புதிதாக தன்னார்வத் தொண்டர்களை உருவாக்குவது, புதிய ஆதரவாளர்களை உருவாக்குவது, மேலும் பிரதிநிதிகளை உருவாக்குதல் போன்ற காரியங்களைத் தெளிவாக பகிர்ந்து கொண்டார். அநேகர் தங்களை ஊழியத்திற்காக அர்ப்பணித்தனர்.

இந்தக் கூடுகையின் காணிக்கைக்கான ஜெபத்தை **Pr. ஆல்பர்ட்சிங்** (IPC Church, பாறை) அவர்கள் ஏறெடுத்தார்கள். அதன்பின் **Bro. கோபி** (குலசேகரம்) அவர்கள் வேதபாடம் வாசித்தார்கள். **Bro. ஜார்ஜ்** (இயேசு பிறப்பிக்கிறார் ஊழியம், குலசேகரம்) அவர்கள் இந்த கூடுகைக்காகவும் ஷாலோம் ஊழியங்களுக்காகவும் ஜெபித்தார். அதனைத் தொடர்ந்து **சகோ. V. தேவதாஸ்** அவர்கள் பணித்தள செய்தி மற்றும் சிறப்பு செய்தி கொடுத்து அனைவருக்காகவும் ஜெபித்தார்கள். இந்தக் கூடுகையின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் **Bro. கிங்பெர்ட்,** மார்த்தாண்டம் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். தேவ கிருபையால் கூட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தேவனுடைய பிரசன்னம் கூடுகையின் ஆரம்பம் முதல் முடிவு வரை ஆட்கொண்டிருந்தது. முடிவு ஜெபத்தை **Pr.பெஸ்லெயல் டென்னிஸ்** (களியக்காவிளை) அவர்கள் ஏறெடுத்தார்கள்.

இந்தக் கூடுகையை நடத்த **சகோ. P. ஜார்ஜ், சகோ. கிங்பெர்ட், சகோ. S. செல்வதுரை,** ஆகியோர் மிகவும் உறுதுணையாக இருந்து அனைத்து காரியங்களையும் ஒழுங்கு செய்தார்கள். அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக... தேவனுக்கே மகிமை!

## சகோ. சாமுவேல் ஜெபராஜ், சகோ. சேகர், சகோ. ஜெபராஜ்

நம் ஷாலோம் ஊழியங்களையும், பீல் மக்களையும் மிக அதிகமாக நேசிக்கும் சென்னையைச் சேர்ந்த **சகோ. ஜெபராஜ், சகோ. சாமுவேல், சகோ. சேகர்** ஆகிய மூவரும் தேவனுடைய சித்தத்தின்படியும் அநாதி தீர்மானத்தின்படியும் கடந்த மார்ச் மாதம் 21ம் தேதி சென்னையி–ருந்து நமது ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிட வந்தார்கள். முதலாவதாக இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பிஜல்பூர் ஆதிவாசி மாணவர் விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களையும், கோய்காவிலுள்ள ஆதரவற்ற மாணவர் விடுதியையும் பார்வையிட்டார்கள். அதன்பின் கும்புரா கிராம ஆலயத்தை பார்வையிட்டார்கள். அதன்பின்பு குஜராத் மாநிலம் ஹிரோலா கிராமத்தில் நடைபெற்று வரும் Compassion Programme–ஐயும் ஜாலோத்தில் நமது ஊழியம் ஆரம்பிக்கப்பட்ட பேய் பங்களா என்ற வீட்டையும் பார்வையிட்டனர். அதன்பின்னர் 22ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று சகோதரர்கள் மூன்று பேர் மற்றும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோரும் சேர்ந்து மத்தியப்பிரதேசம் ஜாம்புகேடா ஆலயத்தை பிரதிஷ்டை செய்து, தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் அந்தர்வே–யா கிராமத்திலுள்ள விடுதி பிள்ளைகளைச் சந்தித்துவிட்டு, அந்தர்வே–யா கிராமத்தையும் பார்வையிட்டார்கள். அதன்பின் ஆத்துமபாரத்துடன் சகோதரர்கள் மூவரும் சென்னைக்குத் திரும்பி நமது ஊழியங்களை அநேகருக்கு அறிமுகம் செய்து வருகிறார்கள். ஊழியங்களை ஜெபித்து தாங்கி வரும் இவர்களையும் இவர்களது குடும்பங்களையும் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக! தேவன் இவர்களை இன்னும் அதிகமாய் ஊழியங்களில் பயன்படுத்த ஜெபியுங்கள்...

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை

12.03.2009 அன்று மார்த்தாண்டத்தில் **சகோ. K.N. ராஜன் (**இயேசு அதிசயங்களைச் செய்கிறார், மார்த்தாண்டம்) அவர்கள் மார்த்தாண்டம், லட்சுமி நாராயணா மண்டபத்தில் நடத்திய உபவாச ஜெபத்தில் ஷாலோம் பீல் சுதேச ஊழியர்கள்



**கமல்சிங் பாபோர்** (சூலாமதுடா, ம.பி)

**நிர்மல் டோடியார்** (அகோரியா சோட்டா) ஆகிய இருவரும் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். தேவன்தாமே பிரதிஷ்டை ஆராதனையை ஆசீர்வதித்துத் தந்தார்! ஷாலோம் பீல் சுதேச ஊழியர்களைத் தாங்கிவரும் **சகோ. K.N. ராஜன்** அவர்களுக்கும் இயேசு அதிசயங்களைச் செய்கிறார் ஊழியங்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## சகோ. சாமுவேல் ஜெபராஜ், சகோ. சேகர், சகோ. ஜெபராஜ்

### ஆகியோரின் பணித்தள வருகை... 21&22 மார்ச்–2009



பிஜல்பூர் மாணவர் விடுதி பார்வையிடல்



ஹிரோலா – Compassion Project பார்வையிடல்



ஜாம்புகேடா கிராம சபையில் கலாச்சார வரவேற்பு



ஜாம்புகேடா கிராம ஆலய பிரதிஷ்டை



ம.பி., வட்டா கிராம ஆலயத்தில்



ம.பி., வட்டா கிராம ஆலயத்தில் ஜெபம்



ம.பி., தலையா கிராம ஆலயத்தை பார்வையிடல்



ம.பி. அந்தர்வேலியா கிராம ஆலயத்தில் ஜெபம்

# மார்த்தாண்டம் பங்காளர் கூடுகை - 22.03.2009



ஆராதனை வேளை



கூடிவந்திருந்த தேவ ஜனங்கள்



மிஷனெரியின் சாட்சி வேளை



மிஷனெரி பிரதிஷ்டை




செய்தி வேளை சகோ. வே. தேவதாஸ்



அர்ப்பணிப்பின் வேளை சகோ. சுதந்திரசிங்



ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்ட சகோ. ஜார்ஜ்



மிஷனெரிகளுக்கு அன்பளிப்பாக வேதப்புத்தகங்கள்

# சென்னை பங்காளர் கூடுகை - 29.03.2009







பாடல் மற்றும் ஆராதனை வேளை



ஆராதனை நடத்தும் Pr. சார்விக் சாமுவேல்



அர்ப்பணிப்பின் வேளை சகோ. சுதந்திரசிங்



மிஷனெரியின் சாட்சி வேளை




மிஷனெரி பிரதிஷ்டை



மிஷனெரிகளுக்கு அன்பளிப்புகள்



கூடிவந்திருந்த தேவ ஜனங்கள்

## தேசத்திற்காகவும் தேர்தலுக்காகவும்
## 72 மணி நேர உபவாச ஜெபம் – ஏப்ரல் 1–4






கடந்த ஏப்ரல் 1ம் தேதி மாலை **6.00** மணி முதல் **4ம்** தேதி மாலை **6.00** மணி வரை 72 மணி நேர உபவாச ஜெபம் குஜராத் – தாகோத் CNI ஆலயத்தில் ஏறெடுக்கப்பட்டது.

அனைத்து CNI சபைகள், Salvation Army சபைகள், ஷாலோம் சபைகள் மற்றும் விஷ்வவாணி, O.M., IET, IMS, CSI Mission போன்ற அனைத்து ஊழிய ஸ்தாபனங்களும் இணைந்து ஏறெடுக்கப்பட்டது. சென்னையிருந்து NPA மூலமாக **Dr.** பால் தினகரன் அவர்கள் அனுப்பித்தந்த ஜெபக்குறிப்புகளையும் வழிமுறைகளையும் கைக்கொண்டு இந்த உபவாச ஜெபம் குறிப்பாக பாராளுமன்ற தேர்தலுக்காக ஏறெடுக்கப்பட்டது. இதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்த CNI போதகர் Rev. Dr. Hemilton அவர்களுக்கு எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தேவன் நிச்சயமாகவே தேசத்தில் நடைபெற இருக்கின்ற தேர்தலில் பெரிய காரியங்களைச் செய்து, தமது சித்தத்தினை நிறைவேற்றுவாராக...

# ஷாலோம் பங்காளர் கூடுகை - சென்னை

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

கடந்த **29.03.2009** அன்று தேவனுடைய பெரிதான கிருபையினால் ஷாலோம் பங்காளர் கூடுகை சென்னை, அன்னை அஞ்சுகம் திருமண ஹால் வைத்து சிறப்பாக நடைபெற்றது. இந்த கூடுகையின் ஆரம்ப ஜெபத்தை **Pr. கிறிஸ்டோபர் மணி** (மேசியா இயேசு நம்மோடு சபை) அவர்கள் ஏறெடுத்தார்கள். பாடல்கள் மற்றும் ஆராதனையை **Bro. ஸ்டன்– சுரேஷ்** (Agape Mission, Chennai) நடத்தினார்கள். அதனைத் தொடர்ந்து ஆராதனையின் மீதி வேளையை **Pr.M. சாட்விக் சாமுவேல்** (NLAG Chuch, Chennai) அவர்கள் நடத்தினார்கள். அதன்பின் பணித்தள செய்தியை **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின்பு **சகோ. V. தேவதாஸ்** அவர்கள் சிறப்பு செய்தி கொடுத்து அனைவருக்காகவும் ஜெபித்தார்கள்.

இந்தக் கூடுகையில் மூன்று ஷாலோம் பீல் சுதேச ஊழியர்கள் **Pr.ஆலன் ஜான்** (Mission Director, NLAG Chennai) மற்றும் **Pr.M. சாட்விக் சாமுவேல்** (NLAG Chennai), ஆகியோர் தலைமையில் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். மூன்று ஊழியர்களின் பெயர் மற்றும் அவர்களைத் தாங்குவோர் விபரங்கள் :–

**ரத்தன் மாவி** (கங்கேலா, குஜராத்) Spon. : **Bro. பிரின்ஸ் ஜவஹர்,** சென்னை
**தும்லா G. காட்** (வால்பூர், ம.பி) Spon. : **Bro. சாமுவேல் தேவராஜ்,** சென்னை
**கல்சிங் T. டிண்டோடு** (கரோடு, இராஜ) Spon. : **Bro. ஜோசப் கென்னடி,** சென்னை

மிஷனெரி பிரதிஷ்டையைத் தொடர்ந்து **Bro. சுதந்திரசிங்,** (சென்னை) அவர்கள் ஷாலோம் ஊழியத்திற்கு புதிதாக தன்னார்வத் தொண்டர்களை உருவாக்குவது, புதிய ஆதரவாளர்களை உருவாக்குவது, மேலும் பிரதிநிதிகளை உருவாக்குவது போன்ற காரியங்களைத் தெளிவாக பகிர்ந்து கொண்டார். அநேகர் தங்களை ஊழியத்திற்காக அர்ப்பணித்தனர். அதன்பின் **சகோ. சேகர்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களின் பணித்தளங்களைப் பார்வையிட்ட அனுபவத்தையும் ஊழியங்களைக் குறித்தும் பணித்தளங்களிளுள்ள காரியங்களைக் குறித்தும் எடுத்துரைத்தது இந்த கூடுகையின் சிறப்பம்சமாகும்.

இந்தக் கூடுகையின் நிகழ்ச்சிகள் முழுவதையும் **Pr. ஞானசேகரன்,** சென்னை அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். சிறப்பு விருந்தினராக **Bro. R. கிளாட்சன் பாஸ்கர்,** (Vice President, Sharing Love Mission, Chennai.) அவர்கள் கலந்து கொண்டார்கள். தேவ கிருபையால் கூட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது தேவனுடை பிரசன்னம் கூடுகையின் ஆரம்பம் முதல் முடிவு வரை ஆட்கொண்டிருந்தது. முடிவு ஜெபத்தை **Pr.ஆலன் ஜான்** அவர்கள் ஏறெடுத்தார்கள்.

இந்தக் கூடுகையை நடத்த **சகோ. G. சாமுவேல் ஜெபராஜ்,** K.K. நகர், **சகோ. T. ஜெபராஜ்,** ஆலந்தூர், **சகோ. S. சேகர்,** எக்மோர், **சகோ. ஜேக்கப்,** வேளச்சேரி, மற்றும் **சகோ. B. எபனேசர்,** (Sharing Love Mission, Chennai.) ஆகியோர் மிகவும் உறுதுணையாக இருந்து அனைத்து காரியங்களையும் ஒழுங்கு செய்தார்கள். அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக... தேவனுக்கே மகிமை!



# ஆதிவாசி மாணவர் கல்விக்கான நிதி உதவி

தேவ கிருபையினால் சுமார் 80 இலட்சத்திற்கும் அதிகமான பீல் ஆதிவாசிகள் மத்தியில் குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் மாநிலங்களில் கடந்த 18 வருடங்களில் சுமார் 600 கிராமங்களில் சுவிஷேசம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை செய்துள்ளார். அந்தகாரத்திலும், குடிப்பழக்கத்திலும் பாவ பிடியிலும் வாழ்ந்து கொண்டிருந்த சுமார் 20,000 குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுள்ளார்கள். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

பொதுவாக நாம் அறிந்தபடி பீல் ஆதிவாசிகள் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பமாட்டார்கள். அங்கு பள்ளிக்கூட வசதிகளும் குறைவு. தொண்டு செய்யும் மனப்பான்மையுடன் பணி செய்யும் ஆசிரியர்களும் கிடையாது. பள்ளிக்கூடங்கள் செல்வதற்கு பல மைல்கள் நடந்து செல்ல வேண்டும். பெரும்பாலான கிராமங்களில் மின்சார வசதி இல்லாதபடியால் இரவு நேரங்களில் படிக்க வாய்ப்பு கிடையாது. ஆதிவாசி பிள்ளைகளை படிக்க உற்சாகப்படுத்தும் பெற்றோர்களும் படித்தவர்கள் கிடையாது. பொதுவாக கிராம சூழ்நிலைகள் இரவு நேரங்களில் குடிகாரர்களும், திருடர்களுமாய் சுற்றிவருவதால் படிப்பதற்கான சூழ்நிலைகள் கிடையாது. அப்படியே சற்று படிக்க வாஞ்சையாக இருந்தாலும் 5–வது வகுப்பிற்கு மேல் படிப்பது கடினம். கிராம ஆரம்ப பள்ளிகளில் ஒழுங்காக எழுத படிக்க கூட தெரியாத சூழ்நிலைகள் உண்டு. பெரும்பாலான கிராம மக்கள் தங்கள் பிள்ளைகளை நகரங்களில் தாங்கள் கூ– வேலை செய்யும்போது தங்கள் சிறுபிள்ளையை பாதுகாத்துக் கொள்ள படித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு செல்வார்கள். ஒவ்வொரு கிராமங்களிலும் 8ம் வகுப்பு வரை படித்து பாஸ் பண்ணினவர்கள் மிகக் குறைவாய் இருப்பார்கள். அதிலும் மேலாக 10–ம் வகுப்பு, 12ம் வகுப்பு படித்து பாஸ் பண்ணினவர்களை கைவிரல் விட்டு எண்ணிவிடலாம். ஒரு கிராமத்தில் கல்லூரி படிக்கும் மாணவர்களை பார்ப்பது மிக மிக அரிது. இவைகள் எல்லாவற்றிலும் பார்க்கும்போது ஒரு ஆதிவாசி மாணவன் நன்றாக படிக்கும் போது அண்டை வீட்டார் அல்லது உறவினர் அவனை படிக்கவிடாதபடிக்கு பொறாமையுடன் அசுத்த ஆவிகளை ஏவிவிடுவார்கள். மேலும் 8–ம் வகுப்புக்கு மேல் படிக்கவேண்டுமென்றால் பிள்ளைகளுக்கு உணவு வசதி, நோட்டு, புத்தகங்கள் மற்றும் படிப்பதற்கான செலவீனங்களை ஏற்றுக் கொள்ள பொருளாதார வசதி குறைவு. மேலும் அநேகர் வறுமைகோட்டிற்கு கீழ் இருப்பதினால் தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க மாட்டார்கள். இட ஒதுக்கீடு இவர்களுக்கு இருந்தாலும் அதை பெற்றுக் கொள்ளக்கூடிய கல்வித் தகுதி அவர்களுக்கு இல்லாதபடியினால் ஒவ்வொரு துறையிலும் ஆதிவாசி மாணவர்கள் முன்னேறி வர இயலாமல் தடை ஏற்படுகிறது.

இப்பொழுது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவம், சாபம், பிசாசு இவைகளி—ருந்து விடுதலைபெற்ற விசுவாசக் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகள் தங்களைப் போல் வாழக்கூடாது, தங்கள் பிள்ளைகள் படித்து சாட்சியுடன் வாழ வேண்டும் என்று வாஞ்சையுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இந்த தேவைகளை கண்டறிந்தவர்களாய் பாரத்துடன் ஒவ்வொரு வருடமும் கல்வியறிவு பணிக்காக நம்மால் முடிந்த உதவிகளை செய்து வருகிறோம்.

கடந்த இரு நூற்றாண்டுகளில் மேல்நாட்டு மிஷனெரிமார்கள் நமக்கு சுவிசேஷ ஒளியை தந்து ஆண்டவரண்டை நடத்தி அழகுமிகு ஆலயங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் பல நகரங்களில் அன்று மிஷனெரிமார்களால் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ கல்வி நிலையங்கள் மூலமாக மூன்று நான்கு தலை முறையாக நாம் கல்வியறிவைப் பெற்று வருகிறோம். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு ஜாதி சமயத்தினரும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசீர்வாதமாக இன்றும் அமைந்து வருகிறது. இது நாம் மறுக்க முடியாத உண்மை. இன்றைக்கு கிறிஸ்துவின் அன்பையும், கல்வியறிவையும் பெற்ற நாம் கல்வியறிவில்லாதவர்களுடைய கண்களை திறக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். தேவன் இந்த பீல் மக்களை தெரிந்தெடுத்து அற்புத அடையாளங்களோடு சுதேச ஊழியர்களை தெரிந்தெடுத்து கிராமங்கள் தோறும் சபைகளை தேவன் உருவாக்கி வருகிறார்.

RtúTôÕ Sm êXm Lp®V±Ü ùTtß YÚm Àp B§Yô£ UôQYoL°u ®TWm.

1. அனைத்து சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் – 560
2. ஐ.பி. மிஷன் விடுதி ஜாலோத், குஜராத் – 90
3. ஷாலோம் விடுதி ஜெசவாடா, குஜராத் – 30
4. ஷாலோம் விடுதி அந்தர்வே—யா, மத்தியபிரதேசம் – 25
5. ஷாலோம் அனாதை பிள்ளைகள் ஆசிரமம் கோய்க்கா, இராஜஸ்தான் – 25
6. ஷாலோம் மிஷன் பள்ளி & விடுதி, இராஜஸ்தான் – 220

மொத்தம் – 950

ஆகவே கீழ்காணும் திட்டங்களை ஆவியானவருடைய ஒத்தாசையோடு நிறைவேற்ற பிரயாசப்படுகிறோம்.

✞ தாகோத் (குஜராத்), பான்ஸ்வாடா (இராஜஸ்தான்), ஜாபுவா (மத்தியபிரதேசம்) ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 2010—ஆம் ஆண்டுக்குள் 10 பள்ளிக்கூடங்கள் கட்டி எழுப்பவேண்டும்.

✞ 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களை பராமரிக்கக்கூடிய 100 ஆதிவாசி மாணவர்கள் விடுதிகளை மூன்று மாநிலங்களிலும் எழுப்ப வேண்டும்.

✞ 12–ம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி படிக்க முன்வரும் விசுவாசி பிள்ளைகளை முழுமையாக நிதி உதவி கொடுத்து, ஆலோசனைகள் மற்றும் பயிற்சி கொடுத்து தாங்க வேண்டும்.

✞ இதன் மூலமாக 10 வருடங்களில் இந்த மூன்று ஆதிவாசிகள் நிறைந்த இந்த மாவட்டங்களிலும் குறைந்தது 1000 ஆதிவாசி இளைஞர்கள் தங்கள் சமுதாயத்தில் சிறந்த தலைவர்களாக, அதிகாரிகளாக தொண்டு செய்து தங்கள் மாவட்டங்களை முன்னேற்ற வழி செய்பவர்களாக மாறுவார்கள் என்பது எங்கள் பாரமும் தரிசனமுமாகும்.

✞ பீல் ஆதிவாசி சிறுவர்கள் கல்வியறிவு பெற்று நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

✞ ஒரு பீல் ஆதிவாசி மாணவரை மாதந்தோறும் ரூ. 400/– கொடுத்து ஜெபித்து தாங்கக்கூடிய ஆதரவாளர்களை எழுப்ப வேண்டும்.

## *2009 கல்வியாண்டின் தேவைகள்*

இந்த 2009ம் ஆண்டு ஜுன் மாதத்தில் மேற்கண்ட மாணவர்களின் பள்ளிக்கான கட்டணம் (School Fees, Dress, Note Books) வாங்குவதற்கு ஒரு மாணவனுக்கு ரூ. 500/– வீதம் 950 மாணவர்களுக்கு **ரூ. 4,75,000/–** தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது சபை, ஜெபக்குழு மூலமாக ஒரு சில மாணவர்களுக்காவது கல்வி உதவி செய்ய முன் வாருங்கள்.


**"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்."** (மத்தேயு 25:40) இந்த வசனத்தின்படி பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக நீங்கள் தியாகத்தோடு கொடுக்கும் நிதி உதவிகளை ஆண்டவர் ஏற்றுக் கொண்டு **"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்"** (ஏசாயா 53:13) என்ற வசனத்தின்படி கர்த்தர் உங்கள் சந்ததிகளை ஆசீர்வதிப்பாராக. காணிக்கை அனுப்பும்போது உங்கள் பிள்ளைகளுக்கான ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்களும், ஊழியர்களும் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறோம்.

## ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- மாதந்தோறும் ரூ.2000/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ரூ.500/-மாதம் கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ரூ.400/-மாதம் கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம். (ஒரு ஆண்டிற்கு ரூ. 4,800/–)
- ரூ.60,000/- கொடுத்து ஒரு கிராம ஆலயத்தைக் கட்டிக் கொடுக்க முன் வரலாம்.
- மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- பீல் சுதேச ஊழியர்களுக்கு ரூ.2,500/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ரூ.80/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம். (5550 வேதப்புத்தகங்கள் தேவை)
- அனுதினமும் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக மறவாமல் ஜெபியுங்கள்.
- மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**



## EeLÞdÏ ERY GeLÞdÏ ERÜeLs

- உங்கள் விலாசத்தில் மாறுதல்கள், திருத்தங்கள் இருக்குமென்றால் சரி செய்து ***பழைய, புதிய முகவரிகளை*** தெரியப்படுத்துங்கள். ஏனெனில் நாங்கள் அனுப்புகின்ற பத்திரிக்கைகள் பல எங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றன. உங்களுக்கு ***ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கைகள்*** வருகிறதென்றால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

- உங்கள் பகுதியில் நம் மிஷனெரி ஊழியத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்றால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் தலைமை அலுவலகத்திற்கு உங்கள் நகல் இரசீதும், பணமும் கிடைத்த பின்பு தலைமை அலுவலகத்தி—ருந்து உங்களுக்கு நன்றிக் கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

- நம்முடைய அலுவலகப்பணிகள் அனைத்தும் Computer மயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து ஆதரவாளர்களுக்கும் குறியீட்டு எண் (Sponser ID No) கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது தங்கள் குறியீட்டு எண்ணை (Sponser ID No) தவறாது எழுதுங்கள்.

- நீங்கள் அனுப்புகின்ற காணிக்கை, மணியார்டர், டிராப்ட், காசோலை மற்றும் கடிதங்களுக்கு அதிகபட்ச இரு வாரங்களுக்குள் இரசீதும், நன்றிக் கடிதமும் வரவில்லையென்றால், உடனடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குத் தொலைபேசி அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டுகிறோம். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க ஏதுவாயிருக்கும்.

- நீங்கள் M.O அனுப்பும் போது எங்களுக்குக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் உங்கள் ***தெளிவான முகவரியையும், ஜெபக்குறிப்புகளையும்*** எழுதி அனுப்பினால் உங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்க மிகவும் ஏதுவாயிருக்கும்.

- எங்களோடு தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய பங்காளர் எண்ணைக் (Partner No.) குறிப்பிடவும்.

## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி


Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

# பில்- பிரே

மிஷனெரி முன்னோடிகள்



**ஹென்றி மார்ட்டின்** இங்கிலாந்து தேசத்தில் துருரோ என்ற குக்கிராமத்தில் 1764 ஆம் ஆண்டு பிறந்தார். தகப்பனார் ஒரு கிறிஸ்தவர் இவரது சிறுவயதிலேயே தகப்பனார் இறந்து போனதால் 17 வயது வரை தனது தாத்தாவுடன் வாழ்ந்து வந்தார். பிறகு டெவன்சயர் என்ற இடத்திற்குச் சென்று துன்மார்க்கமாக ஜீவிக்க ஆரம்பித்தார். பயங்கர குடிகாரனாக மாறினார். ஒவ்வொரு இரவும் இவரது மனைவி இவரை மதுபானக்கடைக்குச் சென்று அழைத்து வருவார்.

ஒரு முறை ஹிக்மில் என்ற இடத்தில் ஒரு ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு கூடுகையில் பாவ உணர்வடைந்து விடுதலைக்காக தேவனை நோக்கிக் கெஞ்சினார். தேவன் அவரை ஏற்றுக்கொண்டு, எல்லையில்லாத சந்தோஷத்தினால் நிரப்பினபடியால், வழியெல்லாம் தேவனை துதித்துக்கொண்டே திரும்பினார். அன்று முதல் தனக்காக ஜீவனைக் கொடுத்த ஆண்டவருக்காக வாழ தீர்மானித்தார். பில்— பிரே உலகமெங்கும் புகழ்பெற்று கிறிஸ்துவுக்கென்று எரியும் சுடராக விளங்கினார்.

பில்— அடிக்கடி ஆண்டவரின் அன்பு நிரம்பி வழிந்தோடுவதை உணர்ந்து, ஆனந்தக் கண்ணீர் வடித்து, சந்தோஷத்தால் நடனமாடுவார். பிறகு அவருடைய புதிய ஜீவியம் அநேகருக்கு தெரியவந்தது. விக்டோரியா ராணி, ஸ்பர்ஜன் போன்றோர் இவருக்கு அறிமுகமானார்கள். எப்போதும் சந்தோஷத்தினால் நிரம்பி இருந்ததால் நடனமாடிக்கொண்டே இருப்பார். இதை சிலர் ஆட்சேபித்தனர். ஆனால் இவரோ தாவீது, மிரியாம் போலவும், —ஸ்தீராவிலுள்ள சப்பாணி சுகமடைந்ததும் எவ்வாறு குதித்தெழும்பி நடனமாடினான் என்றும் பதிலளித்தார். ஜெபத்தில் அதிக நேரம் செலவிடுவார். ஆண்டவர் மீது அதிக விசுவாசம் கொண்டிருந்தார். ஒரு முறை சாத்தான் இவரை சோதித்த போது, இவர் சாத்தானை நோக்கி, நீ எவ்வளவு பெரிய முட்டாள், கடந்த 28 ஆண்டுகளாக நான் உன்னோடு போராடி உன்னை தோற்கடித்திருக்கிறேன். இனிமேலும் உன்னை தோற்கடிப்பேன் என்று கூறினார்.

இவர் இரட்சிக்கப்பட்டபின் முழு மூச்சுடன் தேவனுடைய ஊழியத்தில் ஈடுபட்டார். மக்களின் இரட்சிப்புக்காக, பில்— மிகக் கருத்துடன் ஜெபம் செய்வார். சுரங்கத்தில் வேலை செய்துவந்த பில்— ஆத்துமாக்களுக்காக பாரத்துடன் ஜெபித்து வந்தார். வேலை ஆரம்பிக்குமுன் ஜெபிப்பார். "ஆண்டவரே இன்று யாராவது சுரங்கத்தில் மரிக்க சித்தமானால் அது நானாக இருக்கட்டும்". இவர்களில் யாரும் மரிக்க வேண்டாம். ஏனென்றால் நான் ஆயத்தமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறேன் என்று ஜெபிப்பார். வெற்றிகரமான கிறிஸ்தவ அனுபவத்தைக் கொண்டிருந்ததால், தேன் கூடு தேனீக்களைக் கவர்ச்சிப்பதுபோல், அநேகரைக் கவர்ந்து கொண்டார். ஆகையால் சென்ற இடங்களிலெல்லாம் ஆத்துமாக்களை ஆதாயம் செய்தார்.

தன்னுடைய பிரசங்கங்களில் மிகப்பொருத்தமான உவமானங்களை கூறுவதுண்டு. புகைப்பழக்கம், குடிப்பழக்கத்தை கண்டித்து உணர்த்துவார். ஆடம்பரமான வாழ்க்கையும், பகட்டான ஆடைகளையும் விரும்புவது கிடையாது. பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வதையும், கண்டித்து பேசுவார். "ஒரு ஆலயத்திற்கு மேஜை, நாற்கா— போன்ற தட்டு முட்டு சாமான்கள் எப்படி தேவையோ, அப்படியே ஆலயத்திற்கு சிறந்த தட்டு முட்டு சாமான்கள் அபிஷேகம் பெற்ற ஆத்துமாக்களே" என்று கூறுவார்.

அவர் அடிக்கடி "நான் ஒரு பெரிய கம்பெனியில் வேலை செய்கிறேன். அதற்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று முதலாளிகள் உண்டு" என்றும் கூறுவார். தன் வீட்டிற்காக வாங்கிக் கொண்டு வரும் பொருட்களை, வழியில் கஷ்டப்படும் நபர்களுக்கு கொடுத்து விடுவார். தேவன் என்னை ஒருபோதும் பசியாக வருந்தவிடார் என்று கூறுவார். பில்— வியாதிப்பட்டிருக்கையில், மரித்துப்போவார் என்று டாக்டர் கூறிவிட்டார். உடனே பில்— அவரைப் பார்த்து, "ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்! நான் சீக்கிரம் பரலோகத்தி—ருப்பேன், நீங்களும் அங்கு சீக்கிரம் வந்து விடுவீர்களல்லவா" என்று கூறினார். பின்பு மிகுந்த சந்தோஷத்துடன் "மரணத்தைக் குறித்து எனக்கு பயமில்லை; என்னுடைய இரட்சகர் மரணத்தை ஜெயித்திருக்கிறார். நான் நரகத்திற்கு சென்றாலும் அங்கும் என் ஆண்டவரை துதித்துப் பாடுவேன். நரகமே அதிர்ந்து போகும். உடனே சாத்தான் வேதனையடைந்து பில்— உனக்கு இங்கு இடமில்லை. நீ சீக்கிரம் பரலோகம் போய்விடு என்று கூறுவான்" எனக் கூறினார். பில்— 1868 ஆம் ஆண்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். தோத்திரம் என்பதே அவருடைய இறுதி வார்த்தை.

# ஷாலோம் செயற்குழு & பொதுக்குழு கூட்டம் - 2009

தேவனுடைய பெரிதான கிருபையினால் 25.03.2009 அன்று நாலுமாவடி, இயேசு விடுவிக்கிறார் “ஆத்தும ஆதாய பயிற்சி கூடத்தில் வைத்து ஷாலோம் ஊழியத்தின் **செயற்குழு கூட்டம் மற்றும் பொதுக்குழு** நடைபெற்றது. **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் (இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி) தலைமை தாங்கினார்கள்.

**பங்கு பெற்றவர்களின் விபரங்கள் :**

**Sharing Love Mission உறுப்பினர்கள்:**

**சகோ. மோகன் சி. லாசரஸ்,** இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி
**சகோ.** V. **தேவதாஸ்,**
Prof. C.S. **கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை.
Prof. P. **ஜார்ஜ்,** பாகோடு.
**திரு.** C. **ஜான் விக்டர்,** கோயம்புத்தூர்.
**திரு.** C. **ரோஷன்,** தூத்துக்குடி.
**திரு.** J. **அற்புதராஜ் மர்காஷிஸ்,** தூத்துக்குடி.
**திரு.** B. **அருள்ராஜ்,** நாசரேத்.
**திரு.** G.S. **ஜெபஸ் அகஸ்டின்,** நாசரேத்.
**திரு.** A. **பாண்டியன்,** பெங்களூர்.
Pr. A.A. **ஞானசேகரன்,** சென்னை.

**Shalom Charity Mission உறுப்பினர்கள்:**

**சகோதரி. வஹிதா தேவதாஸ்,**
Dr. **பிரேமா கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை.
**திரு.** J. **வின்ஸ்டன் பாலசிங்,** தூத்துக்குடி.
**திரு.** J.M. **ஜேக்கப்,** சென்னை.



**சிறப்பு விருந்தினர்கள்:**

**திரு.** A. **சுதந்திரசிங்,** சென்னை.
**திரு. சுந்தர்ராஜ்,** பயணம்.
**திரு. ஜெபராஜ்,** சென்னை.
**திருமதி. வேதா அருள்ராஜ்,** நாசரேத்.


இந்தக் கூட்டத்தில் ஷாலோம் ஊழியத்தின் வளர்ச்சிக்கான பல ஆலோசனைகள், தீர்மானங்கள் மற்றும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர்தாமே இந்த கூட்டத்தில் அனைவரோடுங்கூட இருந்து கூட்டத்தை ஆசீர்வதித்துத் தந்தார்.

## அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு...

# நினைவுப்படுத்துகிறோம்......


அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டிய–ல் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து M.O, D.D, Cheque மூலமாக Sharing Love Mission என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டிய–ன் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அ திறக்க சாவி (Key) வேண்டுமானால் 9345675468 இந்த செல் நம்பருக்கு தொடா கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை (Key) அனுப்பி வைக்கிறோம்.



---

# *சந்தாவைப் பற்றி*



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காகவும் இந்த மலரை அனுப்புகிறோம்.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2009) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/–  ஆயுள் சந்தா : ரூ.600/–**

## நாட்டு நடப்புச் செய்திகள்....

பகல், இரவு மற்றும் மேகமூட்டமான நேரத்திலும் பூமியை தெளிவாக படம் பிடிக்கும் செயற்கை கோள் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் தகவல் பரிமாற்ற செயற்கை கோள் ஆகியவற்றை பிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் 20.04.2009 அன்று காலை 6.45 மணிக்கு இஸ்ரோ விண்ணில் ஏவி சாதனைப் படைத்தது. இந்த செயற்கை கோள்கள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தி—ருந்து ஏவப்பட்டது. இது ஏவப்பட்ட 19வது நிமிடத்தில் பூமியி—ருந்து 550 கிலோ மீட்டர் உயரத்திற்குச் சென்று திட்டமிட்டபடி பூமியின் நீள்வட்டப் பாதையை அவை அடைந்தன.

---

உலகின் மிகப்பெரிய பயணிகள் கப்பலான டைட்டானிக் 1912ம் ஆண்டு இங்கிலாந்தி—ருந்து நியூயார்க் செல்லும்போது பனிப்பாறையில் மோதி கட—ல் மூழ்கியது. இந்த கப்ப—ல் இருந்து கிடைக்கப்பெற்ற பொருட்கள் இங்கிலாந்தில் ஏலம் விடப்பட்டன. இந்த பொருட்கள் மொத்தம் 130 கோடிக்கு ஏலம் போனது. இதில் இந்தக் கப்ப—ன் முதல் வகுப்பு அறை ஒன்றின் சாவி மிக அதிகபட்சமாக ரூ. 44 லட்சத்திற்கு போனது என்பது குறிப்பிடதக்கது.

---

ஜப்பானிலுள்ள குரில் தீவில் 19.04.2009 அன்று அதிகாலை பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோளில் 6.4 புள்ளிகள் பதிவாகியுள்ளது. இந்த பூகம்பத்தின் மையம் கடலுக்கு அடியில் இருந்ததாக ஜப்பான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதேபோல் இந்தோனேசியா மற்றும் பவுலவான் தலாத் பகுதியில் 19.04.2009 அன்று பக—ல் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோளில் 6.3 புள்ளிகள் பதிவாகியுள்ளது. இந்த இரண்டு நாடுகளிலும் ஏற்பட்ட பூகம்பத்தில் உயிர் சேதம் மற்றும் பொருட்சேதம் பற்றி விபரங்கள் உடனடியாக தெரியவில்லை.

---

ஏப்ரல் 16ம் தேதி நடைபெற்ற முதல் கட்ட வாக்குப் பதிவில் 17 மாநிலங்களில் உள்ள 124 மக்களவை தொகுதிகளில் வாக்குப் பதிவு நடந்தது. பீகார், ஜார்கண்ட், சட்டிஸ்கார் ஒரிஸா ஆகிய மாநிலங்களில் தேர்தலை சீர்குலைக்க நக்ச்லைட்டுகள் வாக்குச் சாவடிகளில் குண்டுவீசியும், வாக்குப் பதிவு இயந்திரங்களை எரித்தும் தாக்குதல் நடத்தினர், இதில் 5 தேர்தல் அதிகாரிகள், 10 துணை நிலை ராணுவத்தினார் உட்பட 18பேர் ப—யானார்கள்.

---

தலைமை தேர்தல் கமிஷனராக நவீன் சால்வா 20.04.2009 அன்று பதவி ஏற்றார். இதுவரை தலைமை தேர்தல் கமிஷனராக இருந்த என். கோபால்சாமி ஓய்வு பெற்றார். மற்றொரு தேர்தல் கமிஷனராக வி.எஸ் சம்பத் பதவி ஏற்கிறார். திரு. என் கோபால்சாமி அவர்களுக்கு பிரிவுபசார விழா நடைபெற்றது.

---

அமெரிக்காவைச் சேர்ந்த சர்வதேச பங்கு ஆராய்ச்சி நிறுவனம் எ—யட் வேவ் இன்டர்நேஷனல் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஏற்கனெவே தொட்டுவிட்டு சரிந்த 21,000 புள்ளிகளை மும்பை சென்செக்ஸ் அடுத்த 15 ஆண்டில் 1 லட்சம் புள்ளிகளைத் தாண்டும் என அறிவித்துள்ளது.

— நன்றி தினகரன்

# குல்தோரா கிராம ஆலயம் (குஜராத்)



இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள். குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டத்தில் உள்ள மிகவும் உள்ளடங்கியுள்ள கிராமம் குல்தோரா. இங்குள்ள மக்கள் மிகவும் அந்தகாரத்திற்குள் வாழ்பவர்கள். சாராயத்தினைக் குடித்துவிட்டு காரணமின்றி சண்டையிடும் இவர்கள் திருடுவதையும், கொள்ளையடிப்பதையும் வழக்கமாகக் கொண்டவர்கள். பாவம் என்று அறியாமலேயே அனைத்து வகையான பாவங்களுக்கும் அடிமைப்பட்டு இருந்தார்கள். இவர்களில் ஒருவர் சகோ. ராஜேஷ் மாவி.


அசுத்த ஆவிகளின் பிடியில் சிக்குண்டதால் சகோ. ராஜேஷ் மாவியின் தாயார் அதிக வியாதிப்பட்டார். இவ்வியாதியிருந்து விடுதலை பெற மந்திரப்பூஜைகள் செய்தும், மருத்துவமனைக்கு சென்று அதிக பணம் செலவழித்தும் எந்த பலனுமில்லை. ஒரு முறை மத்தியப்பிரதேசத்திலுள்ள சாரேல் கிராமத்தில் நடைபெற்ற ஷாலோம் கூட்டத்திற்கு தனது தாயாரை அழைத்துச் சென்றார். சுதேச ஊழியர் சகோ. முகேஷ் இவருடைய தாயாருக்காக ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியிருந்தும், வியாதியிருந்தும் விடுதலை கொடுத்தார்.

தனது தாயாருக்கு சுகம் கொடுத்த இயேசுவை முழுக்குடும்பமும் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனது. சிமளியா கிராமத்தில் ஒரு வருடமாக விசுவாசியாக இருந்து வந்தார். தேவன் இவரை அபிஷேகித்து ஊழியத்திற்கு அழைத்தார். ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்த இவர் மூலம் 24 குடும்பத்தார் ஆண்டவரை ஏற்றுக்கொண்டார்கள். தேவனுக்கே மகிமை! ஆண்டவரை ஆராதிக்க இடம் தேவைப்படவே தன்னுடைய நிலத்தை காணிக்கையாகக் கொடுத்தார். அந்த இடத்தில் இன்று அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இந்த கிராம ஆலயம் இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி ஊழியங்கள் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

## ஷாலோம் செயற்குழு கூட்டம் - 25.03.2009





சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் ஆலோசனைகள் மற்றும் தேவ செய்தியை பகிர்ந்து கொள்கிறார்கள்



சகோ. தேவதாஸ் அவர்கள் திட்டங்களை பகிர்தல்



நிதி அறிக்கை வாசித்தல் - சகோ. அருள்ராஜ்



ஜெபவேளை



பணித்தள அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுதல்



ஆலோசனைகளை பகிர்தல் - Prof. C.S. கிறிஸ்டோபர்



அனைத்து செயற்குழு உறுப்பினர்கள்

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss